இன்றைய செய்தி நாளைய வரலாறு




# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 170 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – தை 17 – சனிக்கிழமை 31 ஜனவரி 2026 – சென்னை 16 + 20 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 170 : Thiruvalluvar Year - 2057 - Thai 17 - Saturday 31 January 2026 - Chennai 16+20 Pages ₹ 5.00

## நாட்டுக்கே வழிகாட்டும் 'திராவிட மாடல்' ஆட்சியில் அடைந்துள்ள

# தமிழ்நாட்டின் வளர்ச்சியை ஊடகங்கள் மக்களுக்குச் சொல்ல வேண்டும்!

## என்.டி.டி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் தமிழ்நாடு உச்சி மாநாட்டில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!




**சென்னை, ஜன.31-**

**"நாட்டுக்கே வழிகாட்டும் 'திராவிட மாடல்' ஆட்சியில் அடைந்துள்ள தமிழ்நாட்டின் வளர்ச்சியை ஊடகங்கள் மக்களுக்குச் சொல்ல வேண்டும்" என்று என்.டி.டி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் தமிழ்நாடு உச்சி மாநாட்டில் உரையாற்றியபோது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.1.2026) சென்னையில் நடைபெற்ற என்.டி.டி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் தமிழ்நாடு உச்சி மாநாட்டில் (TAMIL NADU SUMMIT) கலந்துகொண்டு, ஆற்றிய உரை வருமாறு:-**

தமிழ்நாடும் – தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளும் தேர்தல் களத்திற்கு மும்முர மாக தயாராகிக் கொண்டிருக்கக்கூடிய நிலையில், "தமிழ்நாடு சம்மிட்" என்ற இந்தச் சிறப்பான நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருக்கக்கூடிய NDTV ஊடகத்திற்கு முதலில் என்னுடைய நன்றியை, வணக் கத்தை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**தமிழ்நாட்டின் வளர்ச்சியை ஆங்கில ஊடகங்கள் அறிவீர்கள்!**

இந்திய அரசியலில், நிறைய மாடல்கள் இருக்கின்றன. அதில் 'யூனிக் மாடல்', திராவிட மாடல்! இந்தியா முழுவதும் பார்க்கப்படும் ஆங்கில ஊடகமான நீங்கள், செய்திகளை சேகரிக்க நாடு முழுவதும் பயணம் செய்திருப்பீர்கள். உங்களால் தமிழ்நாட்டிற்கும், இந்தியாவின் பிற பகுதிகளுக்கும் இருக்கும் வேறுபாட்டை நிச்சயம் நீங்கள் உணர்ந்திருக்க முடியும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரைக்கும், அனைத்து மாவட்டங்களும், இரண்டாம் நிலை – மூன்றாம் நிலை நகரங்களும், ஊரகப் பகுதிகளும்கூட வளர்ச்சி அடைந்திருக்கிறது. சிறப்பான உட்கட்டமைப்பு வசதிகளும், போக்குவரத்து வசதியும் இருக்கின்ற மாநிலம் நம்முடைய தமிழ்நாடு. இந்த மாநிலத்திற்கு என்று பரந்துபட்ட அரசியல் பார்வை இருக்கிறது. இங்கு சமூகநீதியையும், சமத்துவத்தையும், சமூக நல்லிணக்கத்தையும், மக்கள் நலனையும் முக்கியமாக நினைக்கிறோம்.

இவை எல்லாவற்றையும் சரியாக கொண்டு சென்று, திறமையான அரசை நடத்துவதால் தான், இந்தியாவிலேயே யாரும் அடைய முடியாத 11.19 சதவிகித பொருளாதார வளர்ச்சியை, திராவிட மாடல் ஆட்சியில் சாத்தியப்படுத்தியிருக்கிறோம். இந்த வளர்ச்சியை நாங்கள் சாதாரணமாக அடைந்துவிடவில்லை. சமூகத்தில் எந்தவொரு பிரிவும் விடுபட்டு விடக் கூடாது என்று, மிகவும் கவனமாக பார்த்துப் பார்த்து திட்டங்களை உருவாக்கியிருக்கிறோம்.

**ஒன்றிய பா.ஜ.க. அரசு தொடர்ந்து ஏற்படுத்தும் நெருக்கடிகள்!**

ஒருபக்கம், ஒன்றிய பா.ஜ.க. அரசு தொடர்ந்து ஏற்படுத்தி வரும் அரசியல் நெருக்கடிகள் எல்லாவற்றையும் எதிர்கொண்டு, மறுபக்கம் தொலைநோக்குப் பார்வையுடன் எதிர்காலத்திற்கான திட்டங்களை உருவாக்கி செயல்படுத்திக் கொண்டு வருகிறோம். தேவைகளுக்கு ஏற்ப, எங்களின் கொள்கைகளும் "Evolve" ஆகி வருகிறது.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

